செ.வெ.எண். 657 நாள் 05.08.2010

பத்திரிக்கைச் செய்தி

ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கல் அமைச்சகம் மூலம்,

- மாற்றுத் திறனாளிகளில் சிறந்த பணியாளர்கள்/சுய தொழில்புரிவோர்,
- மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு வழங்கிய தொழிலதிபர்/நிறுவனம்,
- வேலைவாய்ப்பு பெற்றுத் தந்த பணியமர்த்தும் அலுவலர்/நிறுவனம்,
- மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த முறையில் சேவைபுரிந்த தனி நபர்(மறுவாழ்வு பணியில் நிபுணர் உட்பட)/சிறந்த நிறுவனம்,
- மாற்றுத் திறனாளிகளில் முன்னோடி நபர்,
- மாற்றுத் திறனாளிகளின் வசதிக்காக கண்டுபிடிக்கப்பட்ட புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள்,
- மாற்றுத் திறனாளிகளுக்கு தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்திய நிறுவனங்கள்,
- மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த முறையில் மறுவாழ்வு அளித்த சிறந்த மாவட்ட நிர்வாகம்,
- தேசிய அறக்கட்டளையின் கீழ் செயல்படும் சிறந்த உள்ளூர் அளவிலான குழு,
- தேசிய மாற்றுத் திறனாளிகள் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மாநில அளவிலான முறைப்படுத்தும் நிறுவனம்,
- மாற்றுத் திறன் படைத்த நபர்கள்/குழந்தைகளில் மிகவும் ஆற்றல் படைத்தவர்கள்,
- சிறந்த பிரெய்ல் அச்சகம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்த ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்ட இணைய தளங்களை வடிவமைத்துள்ள நிறுவனங்களுக்கு என பல்வேறு பிரிவுகளில் தேசிய விருதுகள் வழங்கப்படவுள்ளன.

மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள்/நிறுவனங்களை இதற்கான விண்ணப்ப படிவங்களை, மத்திய அரசு “சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கல் துறை” இணைய தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது ஏதாங்கள் வசிக்கும் மாவட்டத்தில் உள்ள மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்களை பூர்த்தி செய்து தக்க இணைப்புகளுடன், சம்பந்தப்பட்ட மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்களால் பரிந்துரை செய்யப்பட்டு 10.8.2010க்குள் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9